# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1791/15 - 2013 ජනවාරි මස 01 වැනි අඟහරුවාදා - 2013.01.01

*1791/15 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423)**

**வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டம்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 ஆம் மற்றும் 48 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் குறிப்பிட்ட சட்டத்தின் 5 மற்றும் 7 ஆம் பிரிவுகளின் நியதிகளில், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றிற்கு இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து கடன்படுவதற்கு, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்படுகிறது.

1. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கருத்தின்படி உத்தரவாதத்தின் மூலமான வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றிற்கு அல்லது கரைகடந்த கம்பனியொன்றிற்கு இவ்வனுமதி ஏற்புடைத்தாகாது.

2. வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டம் 01.01.2013 ஆம் ஆண்டு தொடங்கி 31.12.2015 இல் முடிவடைதல் வேண்டும்.

3. வெளிநாட்டு வர்த்தக கடன்பாட்டுத் திட்டத்தின்கீழ் கம்பனியொன்றிற்கான உயர்ந்தபட்ச கடன்பாடு ஐக்கிய அமெரிக்க டொலர் 30 மில்லியனாக அல்லது அதற்குச் சமமான பெறுமதியில் வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயமாக இருத்தல் வேண்டும். எது எவ்வாறெனினும், கம்பனியொன்றிற்கான உயர்ந்தபட்சக் கடன்பாடு, கலண்டர் ஆண்டொன்றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 10 மில்லியனாக அல்லது அதற்குச் சமமான பெறுமதியில் வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயமாக இருத்தல் வேண்டும்.

4. இங்கு குறிப்பிடப்பட்ட வரையறைகளை விஞ்சி கடன்பட தேவையுடைய ஏதேனும் கம்பனி செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

பி. எச். ஓ சந்திரவன்ச,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

கொழும்பு,
2013, சனவரி 01.

1- 469


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.